செய்தி வெளியீடு எண்:112 நாள்: 22.02.2017

<u>செய்தி வெளியீடு</u>

# மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் கூடுதலாக 50 நாட்கள் வேலைவாய்ப்பு

கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவற்றுள் முக்கிய திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தமிழ்நாட்டின் 31 கிராமப்புற மாவட்டங்களில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

2016—17 ஆம் ஆண்டில், தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் இதுவரை, 33.43 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு ஊதியமாக 4,655 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் நிலவும் வறட்சியின் காரணமாக, 2016—17ம் ஆண்டில் மூன்று கோடி மனித சக்தி நாட்கள் அதிகரித்துள்ளன. இத்திட்டத்தின்கீழ் தினமும் சராசரியாக 12 இலட்சம் தொழிலாளர்கள் பணிபுரிந்த நிலையில், தற்போது வறட்சி காரணமாக இத்திட்டத்தின்கீழ் பயனடையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 18 இலட்சமாக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு அரசு 32 மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மத்திய அரசுக்கு விடுத்த கோரிக்கையினை ஏற்று, மத்திய அரசு நடப்பு நிதியாண்டில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட 100 நாட்களுக்கும் கூடுதலாக 50 நாட்கள் வேலை வாய்ப்பினை வழங்க அனுமதித்துள்ளது.** இந்த உத்தரவினால், தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடியே 23 இலட்சம் கிராமப்புறத் தொழிலாளர்கள் பயன் அடைவர். இத்திட்டத்தின் கீழ் வறட்சியிலிருந்து பாதுகாத்து கொள்ளும் நடவடிக்கைகளாக குட்டைகள், ஏரிகளை தூர் வாருதல் மற்றும் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வெளியீடு: — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை—9**